முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்த நாளை முன்னிட்டு ஜூன் 3ம் தேதி அன்று குரோம்பேட்டை அரசு மருத்துவமனையில் பிறந்த குழந்தைகளுக்கு பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி ஏற்பாட்டில் 15 குழந்தைகளுக்கு தங்க மோதிரம் பழ கூடை சிறு குழந்தைகளுக்கான பவுடர் சோப்பு ஷாம்பு அடங்கிய பரிசு பெட்டகம் ஆகியவற்றை காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர் குறுசிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் குழந்தைகளுக்கு அணிவித்தார். இதில் தலைமை மருத்துவ அதிகாரி பழனிவேல், மண்டல குழு தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை, பகுதி கழக செயலாளர் இ.எஸ்.பெர்னார்ட், மாவட்ட பிரதிநிதிகள், வட்ட கழக செயலாளர்கள் உட்பட ஏராளமானோர் உடன் இருந்தனர்.

மொழிவாரி மாநிலங்கள் அமையப் போராடிய அனைத்துத் தலைவர்களையும் அவமதிக்கிறார்!

அரசமைப்புச் சட்டத்திற்கு எதிராகச் செயல்படும் ஆளுநர் ராஜினாமா செய்ய வேண்டும்!

பொதுப்பள்ளிக்கான மாநில மேடையின் பொதுச் செயலாளர் பிரின்ஸ் கஜேந்திரபாபு அறிக்கை!

சென்னை, ஜூன் 5-

பொதுப் பள்ளிக்கான மாநில மேடையின் பொதுச் செயலாளர் பிரின்ஸ் கஜேந்திரபாபு விடுத்துள்ள அறிக்கையில், "மொழி வாரி மாநிலங்கள் அமைந்திடப் போராடிய அனைத்துத் தலைவர்களையும் அவமதிக்கிற, அரசமைப்புச் சட்டத்திற்கு எதிராகச் செயல்படுகிற ஆளுநர் ஆர்.என். ரவி ஆளுநர் பதவியிலிருந்து ராஜினாமா செய்ய வேண்டும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

தெலுங்கானா மாநிலம் உருவான நாளில், அமரஜீவி பொட்டி ஸ்ரீராமுலு மற்றும் கலாச்சார அடையாளத்தின் அடிப்படையில் மாநிலம் வேண்டும் என்று போராடிய அனைத்து தலைவர்களையும் தமிழ்நாடு ஆளுநர் ஆர். என். ரவி நேரடியாக அவமதித்துள்ளார்.

சுதந்திரப் போராட்ட வீரர் பொட்டி ஸ்ரீராமுலு தெலுங்கு மக்களின் கலாச்சார அடையாளம், தனித்துவம், மொழி, பாரம்பரியம் ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் வகையில் தனி மாநிலம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை நிறைவேற்ற சாகும் வரை உண்ணாவிரதம் இருந்து தனது இன்னுயிரை தியாகம் செய்தார். அவரது மரணம் முதல் மொழிவாரி மாநிலமான ஆந்திரப் பிரதேசம் உருவாக்க அரசாங்கத்தைக் கட்டாயப்படுத்தியது.

1956 ஆம் ஆண்டு இந்தியாவில் மாநிலங்களின் மறுசீரமைப்பு இந்தியாவின் கலாச்சார பன்முகத்தன்மையை அங்கீகரிக்கிறது, முற்றிலும் மொழியியல் அடிப்படையில் அமைந்தது. தெலுங்கு மொழிவழி தேசியத்திற்குள் தெலுங்கானா அதன் சொந்த கலாச்சார அடையாளத்தைக் கொண்டுள்ளது.

தமிழ்நாட்டின் ஆளுநர் ஆர்.என்.ரவி தேசியம் மற்றும் தேசத்தை வேறுபடுத்திப் பார்க்க முடியாதவர்.

இந்தியா பல்வேறு இன, கலாச்சார மற்றும் மொழி தேசிய இனங்களைக் கொண்ட ஒரு தேசம்.

வேற்றுமையில் ஒற்றுமை என்பது இந்தியாவின் அடிப்படைத் தத்துவம். இந்த ஒற்றுமை இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் வாழும் மக்களின் தீவிர தியாகங்கள் மற்றும் கடின உழைப்பால் நீண்ட கால போராட்டத்தின் விளைவாக கட்டமைக்கப்பட்டது.

தமிழக ஆளுநர் ஆர். என்.ரவி இந்திய அரசியல் சட்டத்தை தவறாகப் புரிந்துக்கொள்கிறார். இந்திய அரசமைலமைப்புச் சட்டத்தின் முதல் பிரிவு, " இந்தியா என்ற பாரத், மாநிலங்களின் ஒன்றியமாக இருக்கும்". என்று கூறுகிறது.

பாபாசாகேப் டாக்டர். பி.ஆர்.அம்பேத்கர் அரசியல் நிர்ணய சபையில் பல்வேறு நாடுகளின் அரசமைப்புச் சட்டங்களை இந்திய அரசமைப்புச் சட்ட வரைவுடன் ஒப்பிட்டு இந்தியாவில் இரட்டை அரசாங்க நடைமுறையை மிகத் தெளிவாக விளக்கி, இந்தியா அமெரிக்கா, ஆஸ்திரேலியா போன்றது அல்ல என்று தெளிவாக விளக்கினார்.

வட அமெரிக்க பிரதேசங்களை ஆக்கிரமித்து குடியிருப்புகளை உருவாக்கிக் கொண்ட ஐரோப்பியர்கள், தங்கள் சொந்த தாய் நாட்டிலிருந்து சுதந்திரம் அறிவித்தனர். தங்கள் சொந்த தாய் நாட்டிற்கு எதிராக போரிட்டு அமெரிக்காவை உருவாக்கினர். அமெரிக்க கண்டத்தின் பூர்வீக மக்களின் பண்பாட்டு வரலாறு அல்லது அமெரிக்காவில் உள்ள ஐரோப்பிய எஜமானர்களுக்கு சேவை செய்ய வேட்டையாடப்பட்டு அடிமைகளாக கொண்டு வரப்பட்ட ஆப்பிரிக்க கண்ட மக்களின் பண்பாட்டு வரலாறு அமெரிக்காவில் மாநிலங்கள் ஒழுங்கமைக்கப்பட்ட போது கருத்தில் கொள்ளப்படவில்லை. "நிர்வாக வசதிக்காக உருவாக்கப்பட்ட மாநிலங்கள்" என்ற ஆர். என்.ரவியின் கூற்று ஐக்கிய அமெரிக்க மாநிலங்களுக்கு (USA) வேண்டுமானால் பொருந்தலாம். இந்தியாவிற்கு ஆர்.என். ரவியின் கூற்று பொருந்தாது.

இந்தியாவுக்கு ஒரு வரலாறு உண்டு. தமிழ்நாட்டின் பண்பாட்டு வரலாற்றை, வரலாற்றுக்கு முற்பட்ட காலகட்டத்திலேயே காணலாம். இந்திய சமூகத்தில் உள்ள ஒவ்வொரு கலாச்சார மற்றும் மொழி சார்ந்த தேசிய இனத்தின் கலாச்சாரத்தையும் மொழியையும் பாதுகாக்க இந்திய பூர்வகுடி மக்கள் வரலாறு முழுவதும் போராடினார்கள்.

அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கிய தலைவர்கள், இந்திய கலாச்சாரப் பன்முகத்தன்மையைத் தெளிவாக அங்கீகரித்து இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 246வது பிரிவின் கீழ் தரப்பட்ட அதிகாரப் பகிர்வின்படி ஒவ்வொரு மாநிலத்திற்கும் இறையாண்மை வழங்கியுள்ளனர்.

மாநிலங்களுக்கு தங்கள் சொந்த அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கும் அதிகாரம் இல்லை என்பது தெளிவாகிறது. மாநிலங்கள் இந்தியாவை விட்டு விலக முடியாது. ஆனால் மாநில மக்களின் கலாச்சாரம் மற்றும் மொழியைப் பாதுகாக்கவும் வளர்க்கவும் இந்தியாவில் உள்ள மாநிலங்களுக்கு உரிமை உண்டு.

இந்தியாவில் உள்ள ஒவ்வொரு தேசிய இனத்தின் கலாச்சாரம் மற்றும் மொழியியல் உரிமைகளைப் பாதுகாத்து அதை வளர்த்திட அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வது ஒன்றிய மற்றும் அதன் அலகுகளான மாநிலங்களின் பொறுப்பாகும்.

நிர்வாக வசதிக்காக மாநிலங்கள் உருவாக்கப்பட்டன என்று கூறுவது, தங்கள் சொந்த கலாச்சாரத்தையும் மொழியையும் காக்க உச்சபட்ச தியாகம் செய்த மக்களை அவமதிக்கும் செயலாகும்.

மொழிவாரி தேசிய இனங்களை அவமானப்படுத்த தெலுங்கானா மாநிலம் உருவான நாளை தமிழ் நாடு ஆளுநர் தேர்வு செய்துள்ளதுள்ளார்.

பன்முகத்தன்மை ஏற்றுக்கொள்ளப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டு, ஒவ்வொரு தேசிய இனமும் அதன் பண்பாட்டு அடையாளத்தை பாதுகாக்க அனுமதிக்கப்படும்போது மட்டுமே ஒற்றுமையை உறுதிப்படுத்த முடியும்.

புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் பிரச்சனைகளை தீர்ப்பதற்காக இந்தியாவின் பண்பாட்டுப் பன்முகத்தன்மையை அழிக்க ஆர்.என். ரவி முற்படுகிறார் என்பது வேதனைக்குரியது.

யூதர்களின் அடையாளத்தை ஜெர்மனியின் நாஜிகள் அழிக்க முயன்றனர். பாலஸ்தீன அடையாளத்தை அழித்தொழிக்க முழு முயற்சியையும் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தியாவில் பலதரப்பட்ட கலாசார அடையாளங்களை அழித்திடும் நோக்கத்தோடு செயல்படுபவர்கள் பல்வேறு வழிமுறைகளை பின்பற்ற முயற்சிக்கின்றனர். பன்முகத்தன்மை கொண்ட இந்தியாவை அழித்து, சமஸ்கிருதப் பண்பாட்டை அடிப்படையாகக் கொண்ட ஒற்றை பண்பாட்டுத் தேசத்தை நிறுவுவதே அவர்களின் நோக்கம்.

தமிழ்நாடு ஆளுநரின் அதிகாரபூர்வ இல்லத்தில் அமர்ந்துக் கொண்டு இது போன்ற பிரச்சாரங்களை மேற்கொண்டு வருவதன் மூலம் தமிழ்நாடு மக்களை ஆர்.என்.ரவி அவமானப்படுத்துகிறார்.

தமிழ்நாடு ஆளுநர், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை தவறாக விளக்கி, உண்மைகளை தவறாக சித்தரித்து ஆபத்தான பிரித்தாளும் அரசியலை நடத்தி வருகிறார். தமிழ்நாடு ஆளுநரின் செய்தி அவரது ஆணவப் போக்கையும் , அரசியலமைப்பு விழுமியங்களை அவர் முற்றிலும் புறக்கணிப்பதையும் வெளிப்படுத்துகிறது. இந்திய அரசமைப்புச் சட்டத்தைக் காத்திட மேற்கொள்ளப்பட்ட உறுதிமொழியை அவர் மீறுகிறார்.

வேற்றுமையில் ஒற்றுமை என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்ட இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை பாதுகாப்பதே உறுதிமொழியாகும், ஆனால் நடைமுறையில் ஆர்.என்.ரவி இந்திய அரசமைப்புச் சட்டத்தின் நோக்கத்திற்கு, விதிகளுக்கும் எதிராகச் செயல்படுகிறார்.

ஆர்.என்.ரவி தனது அறிக்கையை திரும்பப் பெற வேண்டும்.

அவர் சார்ந்த அமைப்பின் சித்தாந்தத்தைத் தொடர்ந்து பரப்புரை செய்ய விரும்பினால் ஆளுநர் பதவியை ஆர்.என். ரவி ராஜினாமா செய்ய வேண்டும்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

32 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம் : 25.7.1931

மறைவு : 5.6.1991

எஸ்.மோகன்தாஸ்

முரசொலி மாறன் குடும்பத்தினர்

எம்.அசோகன் – அ.சுமதி
சி.கண்மணி – கே.கவிதா

மற்றும் பேரக்குழந்தைகள்

ஓமன் தி.மு.க. அயலக அணி சார்பாக முத்தமிழ் அறிஞர் கலைஞரின் நூற்றாண்டு விழா மஸ்கட் மாநகரில் மிகுந்த எழுச்சியுடன் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் கலைஞர் பற்றிய பேச்சு போட்டிகள், ஓவிய போட்டிகள்,கவிதை போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சியில் ஓமன் தி.மு.க. செயலாளர் சிவக்குமார், தலைவர் பாலமுருகன், பொருளாளர் சிவசெந்தில் மற்றும் மகளிர் அணியைச் சார்ந்த ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

பெருநகர சென்னை மாநகராட்சி, தேனாம்பேட்டை மண்டலம், வார்டு117க்குட்பட்ட விஜயராகவா சாலையில் அமைக்கப்பட்டுள்ள நகர்ப்புர நலவாழ்வு மையத்தினை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (04.06.2023) பார்வையிட்டு ஆய்வு செய்தார்.இந்த ஆய்வின்போது, மேயர் திருமதி ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் நாஎழிலன், கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ.இராதாகிருஷ்ணன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சுகாதாரச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, தேசிய நலவாழ்வு குழுமத் திட்ட இயக்குநர் திருமதி ஷில்பா பிரபாகர் சதீஷ், உட்பட பலர் கலந்து கொண்டனர்.

நகரச் செயலாளர் கோ.சத்தியமூர்த்தி தலைமையில்

குன்றத்தூர் நகரத்தில் கலைஞர் நூற்றாண்டு விழா வாழ்த்தரங்கக் கூட்டம்!

டி.ஆர்.பாலு எம்.பி. – அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரை!

காஞ்சிபுரம், ஜூன். 4

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், குன்றத்தூர் நகர தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு தொடக்க விழாவையொட்டி வாழ்த்தரங்கக் கூட்டம் 2.6.2023 - வெள்ளிக்கிழமை மாலை 6 மணி அளவில் குன்றத்தூர் நகராட்சி அலுவலகம் அருகில் நடைபெற்றது.

விழாவிற்கு நகரச் செயலாளர் கோ.சத்தியமூர்த்தி தலைமை தாங்கினார்.

லயன் என்.குணசேகர் வரவேற்புரை ஆற்றினார்.

ஏ.கோதண்டம், டி.கே. குமாரசாமி, டி.எஸ்.கலைச்செல்வன், டி.எஸ்.மாணிக்கம், எம்.சங்கர், அ.தமிழ்மாறன், டி.திருநாவுக்கரசு, கே.கே.இராசமாணிக்கம், க.வே.சிதம்பரம், ஜெ.மணிமாறன், ஆர்.கே.அபிபுன்னிசா, என்.கருணாநிதி, த.கந்தசாமி, டி.என்.அருள்மொழி, டி.வி.சரவணன், கே.எஸ்.ராஜி, எம்.குமாரசாமி, ஜெ.முனுசாமி, ஆர்.கே.சையத் யூசப், ம.ஹரி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்டக் கழகச் செயலாளரும் அமைச்சருமான தா.மோ.அன்பரசன் வாழ்த்து அரங்கை தொடக்கி வைத்து சிறப்புரை ஆற்றினர்.

வாழ்த்துரங்கில் காலத்தை வென்ற கலைஞர் ஒரு பல்கலைக் கழகம் எனும் தலைப்பில் நகைச்சுவை நலம் குறித்து புலவர் மா.ராமலிங்கமும், தமிழ் சுவையின் நலம் குறித்து சுந்தர ஆவுடையப்பனும், சமூக நலம் குறித்து கவிஞர் சிவகுருநாதனும், மகளிர் நலம் குறித்து முனைவர் வேதநாயகியும் உரையாற்றினர்.

கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி வாழ்த்துரங்கை முடித்து வைத்து சிறப்புரை ஆற்றினார்.

இதில் படப்பை ஆ. மனோகரன், பட்டூர் எஸ். ஜபருல்லா, ஏ.வந்தே மாதரம் தி.வே.நமச்சிவாயம், என், பழனி, எம்.பக்தவச்சலம், கே.தங்கராஜ், கே. நாகேந்திரன், ஜெ.தயாளன், இ.பலராமன், எம்.உமாபதி, கே.வஜ்ஜிரவேல், டி.காசிநாதன், இ.முத்து, இ.லோகநாதன், கு.தாமோதரன், பி.சத்தியமூர்த்தி, கே.திருமலை, எஸ்.சந்துரு, மு.நாகநாதன், என்.காதர், ஜெ.சங்கர், என். விஜயகுமார், எஸ்.கதிரவன், ஆர்.கே.டில்லிபாபு, எம்.அரிகிருஷ்ணன், இரா.வேலாயுதம் மற்றும் பலர் பங்கேற்றனர்.

ஏ.ராஜேஷ்குமார் நன்றி கூறினார்.

தேசத் துரோக சட்டப்பிரிவு '124ஏ'வை ரத்து செய்யக் கூடாது!

மோடி அரசுக்கு சட்ட ஆணையத் தலைவர் ஆபத்தான பரிந்துரை!

புதுதில்லி, ஜூன். 5

"தேசத்துரோக சட்டத்தின் பிரிவு '124ஏ' கட்டாயம் தேவை" என்று இந்திய சட்ட ஆணையத்தின் தலைவர் ரிது ராஜ் அவஸ்தி, ஒன்றிய அரசுக்குப் பரிந்துரை அளித்துள்ளார். அதுமட்டுமல்லாமல், தற்போது வழங்கப் பட்டு வரும் 3 தண்டனையை 7 ஆண்டுகளாகவோ, அல்லது அதற்கும் அதிகமாக இரட்டைப்படையிலோ அதிகரிக்க வேண்டும் என்றும் ஆபத்தான யோசனைகளை ரிது ராஜ் அவஸ்தி வழங்கியுள்ளார். இந்திய நாடு சுதந்திரமடைந்து 75 ஆண்டுகளாகி விட்ட நிலையிலும், ஆங்கிலேய கால னிய ஆட்சியின் எச்சமாக இருக்கும் 'தேசத் துரோக' சட்டப்பிரிவு 124ஏ தேவையா? என்பது அவ்வப்போது முன்னெழும் விவாதமாக இருக்கிறது. தேசத்துரோக சட்டத்தின் 124ஏ பிரிவு, கருத்துரிமையை நசுக்குவதாக சமூக செயற் பாட்டாளர்கள், எதிர்க்கட்சியினர் உள்ளிட்டோர் தொடர்ந்து விமர்சனங்களை வைத்து வரு கின்றனர். இதனை நீக்குவது தொடர்பாக நீதி மன்றங்களில் வழக்குகளும் தொடுக்கப்பட்டு உள்ளன.

உச்சநீதிமன்றமும், இது தொடர்பாக 2021ஆம் ஆண்டு ஒன்றிய அரசுக்கு நோட்டீஸ் அனுப்பியிருந்தது. அதில், தேசத்துரோகச் சட்டப்பிரிவு 124ஏ வேண்டுமா? என்றும் கேள்வி யெழுப்பி இருந்தது. இது தொடர்பாக பிர மாணப் பத்திரம் தாக்கல் செய்த ஒன்றிய அரசு, அதில், "பிரதமர் நரேந்திர மோடி தலைமை யிலான ஒன்றிய அரசு இதுபோன்ற 1,500 சட்டப் பிரிவுகளை நீங்கியுள்ளது.

இதனால் சுமார் 25 ஆயிரம் வழக்குகள் முடித்து வைக்கப் பட்டன. அதே போல இந்த 124ஏ சட்டப் பிரிவை நீக்குவது குறித்தும் ஆலோசனை மேற்கொண்டு வருகிறது" என்று கூறியிருந்தது. 2022 மே மாதம் இந்த விவகாரத்தில் தீர்ப்ப ளித்த அன்றைய தலைமை நீதிபதி என்.வி. ரமணா தலைமையிலான 3 நீதிபதிகளைக் கொண்ட உச்ச நீதிமன்ற அமர்வு, ஒன்றிய அரசு முடிவெடுக்கும் வரை, இந்திய தண்ட னைச் சட்டத்தில் உள்ள 124A என்ற தேசத் துரோக சட்டப் பிரிவில் வழக்குப்பதிவு செய்யக் கூடாது என உத்தரவிட்டது.

ஏற்கெனவே, தேசத் துரோக வழக்கில் கைது செய்யப்பட்டு சிறை யில் இருப்பவர்கள் பிணை கோரலாம் என்றும் கூறியது. இந்தப் பின்னணியில், '124ஏ' சட்டப்பிரி வின் தேவை குறித்து ஆராயுமாறு இந்திய சட்ட ஆணையத்தின் தலைவரும், கர்நாடக உயர் நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதி பதியுமான ரிது ராஜ் அவஸ்தியை, 2016ஆம் ஆண்டே மோடி அரசு கேட்டுக் கொண்டிருந்தது.

இந்நிலையில்தான், "தேசத் துரோக சட்டத்தின் பிரிவு 124ஏ கட்டாயம் தேவை" என்று 22ஆவது சட்ட ஆணையத்தின் தலைவர் ரிது ராஜ் அவஸ்தி ஒன்றிய அரசுக்கு கடிதம் எழுதியுள்ளார். அதில் அவர் மேலும் கூறியிருப்பதாவது:

"இந்திய தண்டனைச் சட்டத்தில் 124ஏ பிரிவைத் தக்க வைத்துகொள்ள வேண்டும். இருப் பினும் இதில் சில திருத்தங்கள் அவசியமா கிறது. அதாவது குறைந்தபட்ச தண்டனை 3 ஆண்டுகளாக இருக்கிறது. அதேபோல அதிக பட்சமாக ஆயுள் தண்டனை இருக்கிறது. இதில் இந்த குறைந்தபட்ச தண்டனைக்கான ஆண்டுகளை ஒற்றைப்படையிலிருந்து இரட்டைப்படைகளாக மாற்ற வேண்டும். அல்லது 7 ஆண்டுகளாக உயர்த்தப்பட வேண்டும். இந்த சட்டத்தின் கீழ் பலர் தவறாக தண்டிக் கப்பட்டுள்ளனர் என்பதை மறுக்க முடியாது.

எனவே இதனை தடுக்க ஒன்றிய அரசு மாதிரி வழிகாட்டுதல்களை வெளியிட வேண்டும். 124ஏ சட்டப்பிரிவு 'காலனித்துவ மரபு' என்கிற ஒற்றை காரணத்திற்காகவே அதனை ரத்து செய்வதை ஏற்றுக்கொள்ள முடியாது. ஒருவேளை இந்த சட்டப்பிரிவு இல்லாமல் போய்விட்டது எனில், அரசுக்கு எதிராக வன்முறையை தூண்டுபவர்களை கைது செய்ய பயங்கரவாத எதிர்ப்புச் சட் டங்களை தான் பயன்படுத்த வேண்டியிருக்கும். இது 124ஏ சட்டப் பிரிவைவிட கொடூரமானதாகும். மற்ற நாடுகள் இதுபோன்ற சட்டங்களை நீக்கிவிட்டது என்பதற்காக இந்தி யாவும் அப்படி செய்ய வேண்டிய அவசிய மில்லை. மேலும், இப்படி செய்வது உண்மைக்கு புறம்பானதாக இருக்கும். மட்டுமல் லாது நீதிமன்றம் தனது பொன்னான நேரத்தில் இதில் செலவிட வேண்டாம்." இவ்வாறு ரிது ராஜ் அவஸ்தி கூறியுள்ளார்.

தேசத் துரோகக் குற்றப்பிரிவை ரத்து செய்க:

சி.பி.எம். வலியுறுத்தல்!

காலத்திற்குப் பொருந்தாத தேசத் துரோகக் குற்றப்பிரிவை ரத்து செய்ய வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வலி யுறுத்தியுள்ளது. இது தொடர்பாக கட்சி யின் அரசியல் தலைமைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:

இந்தியத் தண்டனைச் சட்டத்தில் உள்ள தேசத்துரோகக் குற்றப்பிரிவு தொடர்பான உச்சநீதிமன்றத்தின் தீர்வறிக்கைகளை மறுதலித்தும், அவை முழுமையாக இல்லை என்றும் கூறி மேற்படி குற்றப்பிரிவை மேலும் முறுக்கி சட்ட ஆணையம் வெளியிட்டுள்ள பரிந்துரைகளை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமைக்குழு பரி சீலனை செய்தது. உச்சநீதிமன்றம், காலத்திற்குப் பொருந் தாத இந்தச் சட்டப்பிரிவை சட்டப் புத்த கங்களிலிருந்தே நீக்க வேண்டும் என்றும் அதற்குத் தேவையான நாடாளுமன்ற நட வடிக்கைகளை எடுத்திட வேண்டும் என்றும் கோரி அதுவரையிலும் இந்தத் தேசத் துரோ கக் குற்றப்பிரிவின் அமலாக்கத்தை நிறுத்தி யும் வைத்திருந்தது. ஆயினும் சட்ட ஆணையம், இந்த தேசத் துரோகக் குற்றப்பிரிவுக்குக் குறைந்த பட்ச தண்டனை முன்பு மூன்றாண்டுகள் என்றிருந்ததை இப்போது ஏழு ஆண்டுகள் என்று விரிவுபடுத்தியிருப்பதன் மூலம் இச்சட்டப்பிரிவின் ஷரத்துக்களை மேலும் வலுப்படுத்தி இருக்கிறது. எதிர்க்கட்சித் தலைவர்களைக் குறி வைத்து அமலாக்கத் துறையினரும், மத்தியக் குற்றப் புலனாய்வுக் கழகமும் (சிபிஐ) மிகவும் வெட்கக்கேடான முறையில் ஏவப்பட்டுவரும் பின்னணி யில், தேசத் துரோகக் குற்றப்பிரிவு குறித்து இது போன்ற பரிந்து ரைகள் அளித்திருப்பது தீய அறிகுறிகளா கும். இந்தக் காலத்திற்குப் பொருந்தாத தேசத் துரோகக் குற்றப்பிரிவு ரத்து செய்யப்பட வேண்டும் என்றே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமைக்குழு கோருகிறது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை கிழக்கு மாவட்டக் கழக

சார்பு அணிகளின் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் பி.கே. சேகர்பாபு அறிவிப்பு!

சென்னை கிழக்கு மாவட்டக் கழக சார்பு அணிகளின் ஆலோசனைக் கூட்டம் 5.6.2023 திங்கட்கிழமை இன்று காலை 10 மணியளவில் சென்னை, ஓட்டேரி, ஸ்டாரன்ஸ் சாலையில் உள்ள எம்.கே.டி. மகாலில் கீழ்கண்ட அணிகளின் கூட்டம் நடைபெறுகிறது.

அணிகளின் விவரம்

வழக்கறிஞர், அணி, வர்த்தகர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, தொண்டரணி, சிறுபான்மையினர் அணி, இலக்கிய அணி, மருத்துவ அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, தகவல் தொழில் நுட்ப அணி, பொறியாளர் அணி

இக்கூட்டத்தில் மேலே குறிப்பிட்டுள்ள அனைத்து அணிகளின் மாவட்ட / பகுதி / வட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அமைச்சர் பி.கே. சேகர் பாபு
செயலாளர்
சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.